1992 செப்டம்பர் 22]

திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதைக் கொடுப்பது என்றுதான் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் கேட்காமல் கொடுப்பது நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில்தான். இந்த வேளையில் வளர்ந்துவரும் இராணிப்பேட்டையில் எண்ணற்ற தொழில் வளாகங்களும், அதில் பணிபுரியும் அதிகாரிகளும் மற்றும் தொழிலதிபர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் இந்த சுய சேவைப் பிரிவைக் கொண்டுவர வேண்டுமென்று பல காலங்களிலே என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இதை அங்கே திறந்தால் அவர்களுக்கு மிகவும் சவுகரியமாக இருக்கும். அதுமட்டுமல்ல, இராணிப்பேட்டையிலிருந்து வேலூர், சென்னை போன்ற நகரங்களுக்கு இந்த மக்கள் சென்று வருவது மிகவும் கஷ்டமாக இருக்கின்ற காரணத்தால், உடனடியாக இதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, தொடங்குவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு விதித்துள்ள நிபந்தனைகளின் படி ஒரு லட்சம் முதல் 3 லட்சம் வரை மக்கட் தொகை உள்ள நகரங்களில் சுமார் ரூ. 40 இலட்சம் விற்பனையை எதிர்பார்த்தால், அங்கே 2,000 சதுர அடியில் விற்பனைப் பிரிவை துவக்கலாம் என்றிருக்கிறது. இதை அடிப்படையாக வைத்து, வட ஆற்காடு—அம்பேத்கார் இணைப் பதிவாளரும், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு விற்பனை பண்டகசாலை தனி அலுவலரும் அப்படிப்பட்ட சாத்தியக் கூறுகள் இல்லை என்று தெரிவித்துள்ளனர். ஆனால் வருகின்ற நாட்களில் அங்கே வாணிபம் பெருகக் கூடிய சாத்தியக்கூறுகள் அமைந்தால் சுயசேவைப் பிரிவை துவக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 36, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

36—

சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் வாடகைக்கு இரு சக்கர வாகனங்கள் வழங்கல்.

*9702—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் படித்த பட்டதாரி இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் உதவ இரு சக்கர வாகனங்கள் வாடகைக்கு விடும் திட்டம் கொண்டு வர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்காக முதற் கட்டமாக சென்னை மாநகரில் இரு சக்கர வாகனங்கள் வாடகைக்கு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் எந்தத் திட்டத்தை அறிவித்தாலும் அந்தத் திட்டம் புரட்சியாக இருக்க வேண்டும். அது புதுமையாக இருக்க வேணடும். அது மக்கள் மத்தியிலே வரவேற்பை பெறவேண்டுமென்ற வகையில் அந்த நோக்கம் கொண்டவர்கள். அட்வான்ஸ்டு சைன்டிபிக் நாலட்ஜ் கொண்டவர்கள். அவர்களுடைய ஆட்சியில் இரு சக்கர வாடகை வண்டிகள் விடும் திட்டத்தை அறிவித்தால், படித்த இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். அதுமட்டுமல்லாமல் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும், ஆண்களுக்கும் இது பெரும் உதவியாக இருக்கும். குறிப்பாக இது 'பீக் அவர்சில்' பெரும் உதவியாக இருக்கும். எனவே, இத்திட்டத்தை நம்முடைய ஆட்சியில் அறிவித்தால், அரசியல் ஏட்டில் பெரும் அங்கம் வகிக்கும் என்பதால், இதில் உடனடியாக ஆவன செய்து அமைச்சரவர்கள், போக்குவரத்துத் துறையையும், உள்ளாட்சித் துறையையும் இணைத்து செயல்படுவதற்கு, ஆலோசனையையும், அதற்குறிய நடவடிககைகையையும், விரைவில் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்— விடைகள் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல எங்கும் புரட்சி எதிலும் புரட்சி என்று தமிழகத்திலே ஒரு புரட்சியை படைத்து வருகிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) இது போன்ற புரட்சிகரமான திட்டங்கள் இன்றைக்கு உருவாக்கப்பட்டு அவை இன்றைக்கு அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன என்பதை மீண்டும் உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 37, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.